# திறன் தமிழகம்

இதழ் – 17
காலாண்டு இதழ்
**ஜூலை 2021**
**முதல் செப்டம்பர் 2021**




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் பெறப்பட்ட 72,622 மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொண்டு சிறப்பாக தீர்வு கண்டமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறைக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள்




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் பிரிவின் கீழ் வேலைவாய்ப்பு கோரி மனு அளித்து, அதன் காரணமாக தனியார் துறையில் பணி நியமனம் பெற்ற பயனாளிகளுக்கு மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் அவர்கள் 14.07.2021 அன்று கோவை வருகையின்போது, கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

## திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 23.07.2021 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களது ஆய்வு.




திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தில் உள்ள புத்தகங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மரியாதைக்குரிய இயக்குநர் அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் பார்வையிடுகின்றனர்.




திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய மூலமாக நடத்தப்பட்ட தமிழ்நாடு சீருடைப்பணி காவலர் தேர்வுக்கான இணையவழி பயிற்சி அளிக்கப்பட்டு, எழுத்துத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 2 நபர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்து புத்தகங்களை பரிசாக வழங்கினார்கள்.




அந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தில் தனியார் துறையில் தெரிவு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.




மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தைப் பற்றியும், உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தைப் பற்றியும் சிறப்புரையாற்றினார்கள்.

## நாகப்பட்டினம் மாவட்டம் செம்போடை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களது ஆய்வு





நாகப்பட்டினம் மாவட்டம் செம்போடை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தை 23.07.2021 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வெ. கணேசன் அவர்கள் ஆய்வு செய்தார்.

# அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களது ஆய்வு








**மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூடத்தில் பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுனர்களுடன் உரையாடுதல்.**

**"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" பிரிவு மனுதாரர்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சி அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி**




02.07.2021 அன்று கிண்டியிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சி சென்னை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் நடத்தப்பட்டது. இதில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் இயக்குநர் திரு.கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் கிண்டி தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார்கள். இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்) மற்றும் மண்டல இணை இயக்குநர் சென்னை அவர்களும் ஊக்கவுரையாற்றினார்கள்.

# ஆசிரியர் உரை



நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு இன்றும் கனவுப்பணியாக நீடிப்பது அரசுப்பணி. ஏனெனில் அரசுப்பணிகள் குறித்த மிகைபிம்பம் இன்னும் நம் சமூகத்தில் இருந்து வருகிறது. நேரடியாக மக்களுக்குப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு, களத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரம், நிலையான வேலை, சமூக பாதுகாப்பு என அரசு வேலைகளுக்கு என பல்வேறு சாதக அம்சங்கள் இருப்பினும், தொன்னூறுகளுக்குப் பின் நாட்டின் பொருளாதாரமும் தொழிலாளர் சந்தையும் தனியார்துறை பங்களிப்பை நோக்கி நகரத் தொடங்கிவிட்டன. ஆனால் ஆண்டுதோறும் மாநில மற்றும் ஒன்றிய அரசுப்பணிகளுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருவதாகவே புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அரசு வேலையில் பணியமர விரும்புவது உற்சாகப்படுத்த வேண்டிய ஒன்றுதான். அதற்காகவே மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலம் இலவசமாக போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரசுத்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் எண்ணிக்கையில் வரம்புக்குட்பட்டவை. ஒவ்வொரு ஆண்டும் கல்வித்தகுதி பெற்று வேலைச்சந்தைக்குள் நுழையும் மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் அரசுத்துறையில் உருவாகும் பணியிடங்கள் மிகச்சொற்பமானது.

அனைவருக்குமான வேலைவாய்ப்பை அரசுத்துறைகளோ, பொதுத்துறை நிறுவனங்களோ மட்டும் உத்தரவாதப்படுத்த முடியாது. எல்லோருக்கும் உரியதொரு வேலை என்ற இலக்கை நிறைவேற்ற முனைவோமெனில் தனியார்துறை வேலைவாய்ப்பு, சுயதொழில் மேம்பாடு, திறன்பயிற்சி, உயர்கல்வி என பல்வேறு தளங்களில் செயல்பட வேண்டியுள்ளது. எனவே படித்த இளைஞர்களிடம் சமகாலத்திய சந்தை நிலவர எதார்த்தம் பற்றியும், தனியார்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதே போல அரசுத்துறை வேலைவாய்ப்பில் உள்ள வரம்புகள் குறித்தும் அதை அடைவதற்கான திட்டவட்ட வழிமுறைகள் குறித்தும் பரந்த அளவில் எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

இந்தச் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகவே தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் நடத்தப்படுகின்றன. இந்தக் காலாண்டிலும் பல்வேறு மாவட்டங்களில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

முந்தைய ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் திறன் விழிப்புணர்வு வாரம் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. பல்வேறு சிறப்புப் பிரிவினர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வுகளும், திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தமிழ்நாடு முழுதும் நடத்தப்பட்டுள்ளன. கோவை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார். மேலும் பயிற்சித்துறையில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் வேலைவாய்ப்பு பிரிவு தொடர்பில் பெறப்பட்ட மனுக்களுக்குச் சிறப்பாகத் தீர்வு கண்டமைக்காக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்ற இனிய செய்தியையும் இத்தருணத்தில் பகிர்ந்து கொள்கிறேன். இது தொடர்பான பணியில் அயராது ஈடுபட்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்ட அனைத்து கள அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயக்குநர்

# திறன் தமிழகம்

இதழ் – 17 காலாண்டு இதழ் ஜூலை 2021 முதல் செப்டம்பர் 2021

முதன்மை ஆசிரியர்

**திரு.கொ.வீர ராகவ ராவ்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை,
இயக்ககம், கிண்டி, சென்னை–32.

ஆசிரியர் குழு

**திரு.த.விஜயகுமார்**
இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு)

**திருமதி.வே. மீனாட்சி**
இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்)

**திரு.தி.இராஜசேகர்**
கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி)

**திரு.செ.ரவிச்சந்திரன்**
கூடுதல் இயக்குநர் (தொழில் பழகுநர் பயிற்சி)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**திறன் தமிழகம்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை,**
**இயக்ககம்**
திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32.

தொலைபேசி எண் : 044 22500900, 22500911
தொலை நகல் எண் : 044 22501595
எண்ணம் மற்றும் செயல் : வேலைவாய்ப்பு பிரிவு, தொழில்நெறி வழிகாட்டல் பிரிவு, இயக்ககம்.

வடிவமைப்பு : திரு.ஆ.பாலசுப்ரமணி, ஓவியர், வேலைவாய்ப்பு துறை, இயக்ககம்.

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட துறை சார்ந்த ஆய்வுகள் | 3-5 |
| 2 | உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் விண்ணப்பித்த மனுதாரர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாம் | 5-8 |
| 3 | தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் நிகழ்ச்சிகள் | 8-10 |
| 4 | மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் | 10-12 |
| 5 | காவல் துறையினரின் வாரிசினர், கிராமப்புற மாணவர்கள் மற்றும் காணி பழங்குடியின மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி | 13-15 |
| 6 | முன்கற்றல் திறனை அங்கீகரிக்கும் நிகழ்ச்சிகள் | 16-18 |
| 7 | இந்திய இராணுவ பணிகளுக்கான ஊக்குவிக்கும் முகாம் மற்றும் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி | 19 |
| 8 | தன்னார்வ பயிலும் வட்டங்களில் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் | 20-23 |
| 9 | மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் | 24-26 |
| 10 | மகப்பேறுக்கு பிந்தைய பெண்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி | 26-27 |
| 11 | அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாடுகள் | 28-30 |

## "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" பிரிவு மனுதாரர்களுக்கு சிறப்பு வேலைவாய்ப்பு முகாம், சென்னை

06.07.2021 அன்று சென்னை, கிண்டியிலுள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் " உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" பிரிவு மனுதாரர்களுக்கு சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.

இதில் 98 நபர்கள் கலந்துகொண்டதில் 27 நபர்கள் பணி நியமனம் பெற்றனர். பணி நியமன ஆணை பெற்றவர்களை இயக்குநர் (வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை) அவர்கள் பாராட்டினார்கள். இணை இயக்குநர் (வே), இணை இயக்குநர் (தொ. நெ. வ) மற்றும் மண்டல இணை இயக்குநர் (வே)சென்னை ஆகியோர்களும் உடன் இருந்தனர்.



# தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம்

வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் ஒவ்வொரு வருடமும் ஜுலை இரண்டாவது வாரத்தில் தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாகவும் மற்றும் 15.07.2021 அன்று திறன் நாளாகவும் அனுசரித்திட அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 2021–ஆம் ஆண்டு ஜுலை இரண்டாவது வாரத்தில் (12.07.2021 முதல் 16.07.2021 வரை) தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாகவும் மற்றும் 15.07.2021 அன்று தேசிய திறன் நாளாகவும் அனுசரிக்கப்பட்டது.

இவ்வாரத்தில் மாவட்டத்திலுள்ள சிறு/குறு தொழில் முனைவோர் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் அரசுப் பணியில் சேர்ந்தோர், எழுச்சியூட்டும் பேச்சாளர் ஆகியோரை கொண்டு இணையதளம் வாயிலாக Google Meet / Zoom / Cisco Webex போன்ற செயலிகள் மூலம் தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மேலும் இவை நீங்கலாக, மாவட்டத்திலுள்ள பொறியியல், மருத்துவம், கலை அறிவியல் தணிக்கை தொடர்பான படிப்புகள் உள்ளிட்ட பல்வேறு கல்வி பிரிவுகளின் வல்லுநர்கள் மற்றும் ஆட்சிப் பணியில் உள்ள வல்லுநர்கள் ஆகியோர்களைக் கொண்டு இணைய வாயிலாக மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கல்லூரி /பள்ளி மாணவர்களைக் கொண்டு தொழில்நெறி தொடர்பிலான ஒரு தலைப்பினை அளித்து குழும விவாதம் மேற்கொள்ளப்பட்டன.

பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு சுய விவரக் குறிப்பு எழுதுதல் (Bio–data), பத்தாண்டுகளுக்கு பின்னர் நான், எனது கனவும் நானும், எதிர்காலத்தில் உருவாகக் கூடிய புதிய தொழில்கள், நான் தொழில்முனைவோரானால் என்ற தலைப்புகளின் கீழ் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தி சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.

அனைத்து நிகழ்ச்சிகளும் மாவட்ட கல்வி அலுவலர், பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்கள் ஆகியோர்களின் உறுதுணையுடனும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதலுடனும் இணையதளம் வாயிலாக Google Meet / Zoom / Cisco Webex போன்ற செயலிகள் மூலம் தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இந்நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டதில் 18,228 மாணவ, மாணவியர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

## திறன் வாரத்தில் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்குதல், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி

**இடம் : மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், தூத்துக்குடி.**
**நாள் : 15.07.2021**




தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்குதல் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் தூத்துக்குடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ), மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர், திறன் பயிற்சி அலுவலகம், தூத்துக்குடி ஆகியோர் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

# தேசிய திறன் நாள் அனுசரித்தல் மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்குதல்

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகர்கோவில்



நாகர்கோவில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் 12.07.2021 முதல் 16.07.2021 வரை தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, தேசிய திறன் நாள் (15.07.2021) தினத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மார்த்தாண்டம், எல்.எம்.எஸ். மகளிர் மேல்நிலைப்பள்ளி, மாணவிகளுக்கு திருமதி.ஜெரிபா.ஜி.இம்மானுவேல், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், நாகர்கோவில் அவர்கள் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

## திருநங்கைகளுக்கான தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருவண்ணாமலை



14.07.2021 அன்று திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பாக மூன்றாம் பாலினத்தவருக்கான தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் நிகழ்ச்சி இணையவழியாக நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திரு. கந்தன், மாவட்ட சமூகநல அலுவலர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் செல்வி. லோ. யோகலட்சுமி அவர்கள், "போட்டித்தேர்வு, வேலைவாய்ப்பு, மெய்நிகர் கற்றல் மற்றும் தனியார் துறை வேலை இணையம்" என்ற தலைப்பிலும் திரு.அ. தனகீர்த்தி, உதவி இயக்குநர் (பொறுப்பு),மாவட்ட திறன்பயிற்சி அலுவலகம் , திருவண்ணாமலை அவர்கள் "திறன் பயிற்சி" என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள். திரு.த.மோகன்ராஜ், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் நன்றி உரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 36 மூன்றாம் பாலினத்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் விழிப்புணர்வு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கடலூர்**







கடலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் விழிப்புணர்வு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.இரா.பாலசுந்தரம் அவர்களது ஏற்பாட்டில் உரிய சமூக இடைவெளியினை பின்பற்றி கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் வாயிலாக மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள், இடஒதுக்கீடு, மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை, மெய்நிகர் கற்றல் இணையதளம், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம், தனியார் துறை இணையதளம் ஆகியவை குறித்து திரு. அ. எகசானலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள் திரு.இ.வெங்கட்ராஜன் மற்றும் திரு.அ.ருக்மாங்கதன் ஆகியோர் எடுத்துரைத்தனர். இதில் 26 மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர்.

# திருநங்கைகளுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல், திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கம்

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கடலூர்**







கடலூர் மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்தில் மூன்றாம் பாலினத்தவருக்கான தொழில்நெறி வழிகாட்டுதல், திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நலத் துறையின் கண்காணிப்பாளர் திருமதி. பி. சுமதி முன்னிலை வகித்தார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. அ. எகசானலி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி. வெ. ரேணுகாதேவி அவர்கள் போட்டித்தேர்வுகள் பற்றியும், மாவட்ட திறன் அலுவலகத்தால் வழங்கப்படும் திறன் பயிற்சி பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். திரு. அறிவழகன், உதவி பொறியாளர், மாவட்ட தொழில் மையம் அவர்கள் மாவட்ட தொழில் மையத்தினால் வழங்கப்படும் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் பற்றியும், சுயதொழில் தொடங்குவது பற்றியும், அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள் பற்றியும், சுயதொழிலில் எவ்வாறு வெற்றி பெறுவது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 18 மூன்றாம் பாலினத்தவர்கள் கலந்து கொண்டனர்.

# முப்படை பணிவாய்ப்புகள் குறித்து சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

**மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தஞ்சாவூர்**





24.09.2021 அன்று ஆண்டு திட்ட நிரலின் ஒரு நிகழ்ச்சியாக பாலிடெக்னிக் பயிலும் மாணவர்களை ஒருங்கிணைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையம், தஞ்சாவூர் சார்பாக பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் கல்லூரியில் முப்படை பணிவாய்ப்புகள் குறித்து சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இம்மையத்தின் உதவி இயக்குநர் அவர்கள் பாலிடெக்னிக் மாணவர்களுக்கான அரசு துறை வேலைவாய்ப்புகள், தனியார்துறை வேலைவாய்ப்புகள் குறித்து மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்புரையாற்றினார். முன்னாள் படை வீரர்கள் நல அலுவலகத்தின் சார்பாக நல அலுவலர் அவர்கள் கலந்துகொண்டு முப்படைகளில் சேர்வதால் கிடைக்கக்கூடிய பயன்கள் மற்றும் சலுகைகள் உள்ளிட்டவை குறித்து விளக்க உரையாற்றினார். இமமையத்தின் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளில் உள்ள சீருடை பணி வாய்ப்புகள் மற்றும் முப்படைகளில் சேர்வதற்கான கல்வித்தகுதி, வயது வரம்பு குறித்து விளக்க உரையாற்றினார். இறுதியாக பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் கல்லூரியின் நியமன அலுவலர் அவர்கள் நன்றியுரை நவில நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

மேலும் இந்நிகழ்ச்சியில் பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த 120 மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# அரியலூர் மாவட்ட காவல் துறையினரின் வாரிசினருக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டி நிகழ்ச்சி




14.09.2021 அன்று அரியலூர் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் காலை 10.30 மணியளவில் காவல்துறை பணியாளர்களது வாரிசுகளுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி திரு.N.B.விஜயகுமார், மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர், அரியலூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருச்சி, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், துணை இயக்குநர், திருமதி.ஜெ.மகாராணி, M.A.,M.Phil., அவர்கள் காவல் துறை பணியாளர்களது வாரிசுகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி குறித்து சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து இராணுவத்தில் வேலைவாய்ப்புகள் குறித்து முன்னாள் படைவீரர் நல அலுவலக துணை இயக்குநர், லெப்.கமாண்டர், தி.சங்கீதா, B.E., அவர்கள் காணொளி வாயிலாக விளக்க காட்சி (Power Point) மூலம் எடுத்துரைத்தார்.

மேலும், போட்டித்தேர்வினை எதிர்கொள்வது குறித்து திரு.A.ஜான்பாஷா,B.E, முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஆண்டிமடம் அவர்கள் எடுத்துரைத்தார். திரு. சு. கு. இரமேஷ், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலக செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 70-க்கும் மேற்பட்ட காவல்துறை பணியாளர்களது வாரிசுகள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

## கிராமப்புற மாணவர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டி நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தேனி




06.08.2021 அன்று தேனி மாவட்ட காவல் துறை மற்றும் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் கிராமப்புற மனுதாரர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சியில் திரு.டோங்கரேபிரவீன் உமேஷ், இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர் திரு. க. முத்துக்குமார், B.A., திரு.அ.நாராயணமூர்த்தி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாணவ மாணவியர், வேலை தேடும் மனுதாரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் உட்பட 600 நபர்கள் கலந்து கொண்டனர்.

# காணி பழங்குடியின இளைஞர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டி கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

**தொழில்நெறி வழிகாட்டி கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி நிலையம், திருநெல்வேலி மாவட்டம்**

காணி பழங்குடியின இளைஞர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 05.08.2021 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 11.00 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று கண்காட்சியினை துவக்கி வைத்து புத்தகங்களை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் திருமதி. அ. ஜோதிமணி, மண்டல இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு), திருநெல்வேலி, திரு.மா.கோ.கணேசன், சுற்றுச்சூழல் மேம்பாட்டு அலுவலர், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், திரு. வே. தியாகராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர், வேலைவாய்ப்புதுறை உதவி இயக்குநர்கள் திரு.கா.ஹரிபாஸ்கர், திரு.ம.மரிய சகாய ஆன்டனி மற்றும் வேலைவாய்ப்பு அலுவலர் ( பொறுப்பு) திரு. சை. சையது முகமது மற்றும் பயிற்றுநர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயின்று போட்டித்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் 30 காணி பழங்குடியின இளைஞர்கள் கலந்து கொண்டனர்.











**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி நிலையம், திருநெல்வேலி**

இடம்: மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலி.

05.08.2021 அன்று நடைபெற்ற கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்திற்கு பின் மாணவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மாணவர்களுக்கு சீருடைப்பணிகள் தொடர்பாக உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் திருமதி.அ.ஜோதிமணி, மண்டல இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு), திருநெல்வேலி, வேலைவாய்ப்பு துறை உதவி இயக்குநர் திரு. ம. மரியசகாய ஆன்டனி மற்றும் வேலைவாய்ப்பு அலுவலர்( பொறுப்பு) திரு.சை.சையது முகமது மற்றும் பயிற்றுநர்கள் மற்றும் 30 காணி பழங்குடியின இளைஞர்கள் கலந்து கொண்டனர்.






## கூடங்குளம் அணு மின் நிலையத்தில் தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சி

12.08.2021 அன்று காணி பழங்குடி மாணவர்கள் கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். இங்கு மாணவர்களுக்கு கூடங்குளம் அணு மின் நிலையத்தின் தோற்றம் அதன் இயக்க செயல்பாடுகள் மற்றும் மின்உற்பத்தி துறைகளில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் போன்றவை குறித்து அணு மின்நிலைய அதிகாரிகள் எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் 23 மாணவிகள் உட்பட 29 மாணவ / மாணவியர் மற்றும் பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி போர்ட் டிரஸ்ட்









19.08.2021 அன்று காணி பழங்குடி மாணவர்கள் தூத்துக்குடி துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். இங்கு மாணவர்களுக்கு தூத்துக்குடி துறைமுகத்தின் தோற்றம் வளர்ச்சி மற்றும் அதன் செயல்பாடுகள் கப்பல் போக்குவரத்து மற்றும் கப்பல் கட்டுமான துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து துறைமுக அதிகாரிகள் எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் 23 மாணவிகள் உட்பட 32 மாணவ மாணவியர் மற்றும் பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர். மதிய உணவு தூத்துக்குடி துறைமுக நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், புதுக்கோட்டை





தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 22.09.2021 அன்று அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப்பள்ளி, பிலாவிடுதி, புதுக்கோட்டையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திரு.கு.இராதாகிருஷ்ணன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொழில்நெறி வழிகாட்டுல்), புதுக்கோட்டை அவர்கள் பின்னடைவு பணிக்காலியிடங்கள், அரசின் சலுகைகள், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து விளக்கவுரையாற்றினார்.

திரு. பெ. வேல்முருகன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், அவர்கள் போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள், வேலைவாய்ப்பினை பெற உதவும் குறுகிய கால பயிற்சிகள் குறித்து மாணவிகளுக்கு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 25 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## முன்கற்றல் திறனை அங்கீகரிக்கும் நிகழ்ச்சிகள்

## முன்கற்றல் திறனை அங்கீகரித்தல் (RPL) தொடர்பாக சிறப்பு தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வார நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தஞ்சாவூர்



15.07.2021 அன்று தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரத்தின் ஒரு நிகழ்ச்சியாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தஞ்சாவூர் மற்றும் தொழிலாளர் நல அலுவலகம், தஞ்சாவூர் இணைந்து முன்கற்றல் திறனை அங்கீகரித்தல் (RPL) குறித்து சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலாளர் நல அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தொழிலாளர் நல அலுவலக உதவி ஆணையர் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். இவ்வலுவலக உதவி இயக்குநர் அவர்கள் முன்கற்றல் திறனை அங்கீகரித்தல் (RPL) குறித்த விழிப்புணர்வு மற்றும் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

# முன்கற்றல் திறனை அங்கீகரித்தல் தொடர்பாக தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி நிலையம், வேலூர்





வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தொழில் கட்டுமான நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு முன்கற்றல் திறனை அங்கீகரித்தல், தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

திறன் மேம்பாட்டுக் கழக மாவட்ட திறன் பயிற்சி அலுவலரைக் கொண்டு R P L சான்றுகள் இல்லாதோரைக் கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சி அளித்து அரசு சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் வேலூர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி நிலைய உதவி இயக்குநர் திரு.செந்தில்குமார் அவர்கள், மாவட்ட திறன் பயிற்சி மைய உதவி இயக்குநர் திரு. சீனிவாசன், மாவட்ட தொழிலாளர் நல அலுவலக உதவி ஆணையர் திரு.தாமரைமணாளன் ஆகியோர் கலந்துகொண்டு விழிப்புணர்வு அளித்தனர். இதில் 25 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் தையல்பயிற்சி முடித்து சான்றிதழ் இல்லாதவர்களுக்கு முன்கற்றல் திறனை அங்கீகரிக்கும் (RPL) நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கடலூர்







கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் முன்கற்றல் திறனை அங்கீகரிக்கும் (RPL) விதமாக கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் தையல் பயிற்சி முடித்து சான்றிதழ் இல்லாமல் இருப்பவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு ஏற்படுத்தும்

விதமாக கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.அ.எகசானலி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் திரு. இரா. பரமசிவம் அவர்கள் முன்கற்றல் திறனை அங்கிகரிக்கும் விதமாக (RPL) கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் தையல் பயிற்சி முடித்து உரிய சான்றிதழ் இல்லாமல் இருப்பவர்களுக்கு கூடிய விரைவில் இரண்டு நாள் பயிற்சி வழங்கப்படும் என்றும் பயிற்சியில் நடத்தப்படும் தேர்வில் வெற்றி பெறுபவருக்கு உடனடியாக அரசின் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். இப்பயிற்சியில் சேர விருப்பம் தெரிவித்தவர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

கடலூர், தொழிலாளர் நலத்துறை கண்காணிப்பாளர் திரு.இளஞ்செழியன் அவர்கள் தொழிலாளர் நல வாரியத்தில் கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் தையல் பயிற்சி முடித்தவர்கள் விரைவில் தொழிலாளர் நல வாரியத்தின் இணையதளம் மூலம் பதிவு செய்ய அறிவுறுத்தினார். இதன் மூலம் தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்படும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் பற்றியும் அதனால் கிடைக்கும் உதவித்தொகை பற்றியும் எடுத்துரைத்தார்.

கடலூர், மகளிர் தொழிற்கல்வி அலுவலர் மகளிர் தொழிற்கல்வி நிலையத்தால் வழங்கப்படும் பல்வேறு படிப்புகள் பற்றியும் ஓராண்டு பயிற்சி மற்றும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பற்றியும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு.இ.வெங்கட்ராஜன் அவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் வழங்கப்படும் இலவச போட்டித்தேர்வுகள் பற்றியும், உதவித் தொகை பற்றியும், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் பற்றியும் தனியார் துறை வேலை இணைய பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 87 நபர்கள் கலந்து கொண்டனர்.

# சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி



மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி மற்றும் டி. என். பி. எஸ். சி தொகுதி I & II போட்டித்தேர்வுகளுக்கான துவக்க நிகழ்ச்சி 17.08.2021 அன்று KTM மஹால் திருச்செந்தூரில் தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மரு.கி.செந்தில்ராஜ் இ.ஆ.ப தூத்துக்குடி அவர்கள் முன்னிலை வகித்தார். திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எம்.கோகிலா அவர்கள் ஊக்கவுரை நிகழ்த்தினார். மேலும் இந்நிகழ்ச்சியில் திருமதி.ம.பேச்சியம்மாள், உதவி இயக்குநர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி அவர்கள் கலந்து கொண்டு தன்னார்வ பயிலும் வட்ட செயல்பாடுகள் குறித்து



எடுத்துரைத்தார். திருமதி.ஷீ.ரா.ரம்யா மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ. வ) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி அவர்கள் டி.என்.பி.எஸ்.சி தொகுதி I & II போட்டித்தேர்வுகளில் எளிதாக வெற்றி பெறுவது எப்படி என்று எடுத்துரைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் சுமார் 100 மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# இந்திய இராணுவ பணிகளுக்கான ஊக்குவிக்கும் முகாம் மற்றும் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி





ஆண்டு திட்ட நிரலின் சிறப்பு நிகழ்ச்சியாக இந்திய இராணுவ பணிகளுக்கான ஊக்குவிக்கும் முகாம் மற்றும் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி புனித லசால் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடியில் 30.09.2021 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திரு.சுரேஷ் கே ராமரெட்டி Lieutenant Commander 3 (TN) தேசிய மாணவர் படை (கடற்படை பிரிவு) தூத்துக்குடி அவர்கள் கலந்து கொண்டு இராணுவத்தில் நடைபெறும் தேர்வுகள் மற்றும் இராணுவ வேலைவாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார். உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் தூத்துக்குடி அவர்கள் கலந்து கொண்டு அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு குறித்து எடுத்துரைத்தார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்( தொ. வ) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் தூத்துக்குடி அவர்கள் 12ம் வகுப்புக்கு பிறகு என்ன படிக்கலாம் என எடுத்துரைத்தார். மேலும் பள்ளியின் முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் சுமார் 156 மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# சென்னை உயர் நீதிமன்ற அலுவலக உதவியாளர், பணி திறன் தேர்விற்கான சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சி



மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகர்கோவில்

சென்னை உயர் நீதிமன்ற அலுவலக உதவியாளர், பணி திறன் தேர்விற்கான சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சி 23.09.2021 அன்று மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகர்கோவிலில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருமதி.A. ஜோதிமணி, மண்டல இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு), திருநெல்வேலி, திரு. பகவதி பெருமாள், சுகாதார ஆய்வாளர், மாநகராட்சி ஆணையர் அலுவலகம், நாகர்கோவில், திருமதி. ஜெரிபா.ஜி.இம்மானுவேல், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், நாகர்கோவில், திரு.வெ.வீரவேல், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 26 தேர்வர்கள் கலந்து கொண்டனர்.

## பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், விருதுநகர்



13.09.2021 அன்று விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையம் வாயிலாக பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) மற்றும் இளம் நிபுணர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 43 மனுதாரர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# தன்னார்வ பயிலும் வட்டம்

## தன்னார்வ பயிலும் வட்டங்களில் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்பு



தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி II போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது.

வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக திறமையான ஆசிரியர்களைக் கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி II போட்டிதேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் கோவிட்–19 காரணமாக இணைய வழியில் நடத்தப்பட்டுவந்தது.

இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் (வே. வா) அவர்களின் அறிவுரைக்கிணங்க தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக நடத்தப்பட்ட போட்டிதேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் 01.09.2021 அன்று முதல் நேரடியாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இதில், 18 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.



மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதிரிதேர்வு 24.09.2021 அன்று நடத்தப்பட்டது. இம்மாதிரித் தேர்வில் 75 மாணவர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

# இரண்டாம் நிலை காவலர் உடற் தகுதி தேர்விற்கான பயிற்சிகள் மற்றும் சார்பு ஆய்வாளர் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட ஆட்சியர் பாராட்டி கேடயம் வழங்குதல்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம், தேனி





19.07.2021 அன்று தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் நடைபெற்ற தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்திய இரண்டாம் நிலை காவலர் எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்ற தன்னார்வ பயிலும் வட்ட மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலகத்துடன் இணைந்து, உடற் தகுதி தேர்விற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் திரு.அ.நாராயணமூர்த்தி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் 6 தன்னார்வ பயிலும் வட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



மேலும், 25.08.202 அன்று தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் பயின்று தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட சார்பு ஆய்வாளர் தேர்வில் தேர்ச்சி பெற்ற தன்னார்வ பயிலும் வட்ட மாணவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.வி.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி கேடயங்களை வழங்கினார். உடன் திரு. வி. சுப்பிரமணியன் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) மதுரை, அவர்கள், திரு.அ.நாராயணமூர்த்தி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் மற்றும் திரு.மு.கோடீஸ்வரன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பயிற்சி பெற்று தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர் போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 23.08.2021 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களை, இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பயிற்சி பெற்று தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வில் தேர்ச்சி பெற்று சார்பு ஆய்வாளர் பணிநியமனம் பெற்றுள்ள 12 தன்னார்வ பயிலும் வட்ட மாணவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றனர். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. இ. கார்த்திக், இ.கா.ப., மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் திரு. செ. மதுக்குமார் மற்றும் திரு. த. அருண்நேரு ஆகியோர் உள்ளனர்.






மேலும், தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக பரமக்குடி ஆயிர வைசிய கல்வியியல் கல்லூரியில் 19.09.2021 அன்று முதுகலை பட்டதாரி ஆசிரியர் போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை திரு.V.சுப்பிரமணியன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), மதுரை அவர்கள் தலைமையேற்று துவங்கி வைத்தார். திரு. A . இராமநாதன், உதவி இயக்குநர் (வேலைவாய்ப்பு), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் திரு.செ.மதுக்குமார் மற்றும் திரு.த.அருண்நேரு ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் துவக்க விழா

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், புதுக்கோட்டை





புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் 01.09.2021 (புதன்கிழமை) முதல் உரிய அரசின் நிலையான வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி நடத்தப்பட்டு வருகிறது இப்பயிற்சி வகுப்பில் 77 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

## தன்னார்வ பயிலும் வட்ட மாணவர்களின் வெற்றி கதைகள்

### சார்பு ஆய்வாளர் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி.







மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக காவல் உதவி ஆய்வாளர் எழுத்து தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு மாதிரி நேர்காணல் தேர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு இத்தேர்வில் வெற்றி பெற்று காவல் உதவி ஆய்வாளர் பணிக்கான நியமன ஆணை பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப தூத்துக்குடி அவர்கள் முன்னிலையில் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் திருமதி. ம. பேச்சியம்மாள், உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி திருமதி.ஷீ.ரா.ரம்யா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்(தொ.வ), மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி மற்றும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 5 தேர்வர்கள் கலந்து கொண்டனர்.

## சார்பு ஆய்வாளர் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி

### மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருநெல்வேலி





திருநெல்வேலி மாவட்டம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் பயிற்சி பெற்று காவல் உதவி ஆய்வாளர் பணிக்குத் தேர்ச்சி பெற்ற 24 மாணவ , மாணவிகளுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வே. விஷ்ணு, இ. ஆ. ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் ( வேலைவாய்ப்பு) திருமதி. ஜோதிமணி, வேலைவாய்ப்பு துறை உதவி இயக்குநர்கள் திரு.கா.ஹரிபாஸ்கர், திரு.மரிய சகாய ஆண்டனி மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொ) திரு.சை.சையது முகம்மது ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம், நாள்.28.08.2021





அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, உத்திரமேரூரில் நடைபெற்ற மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட வேலைநாடுநர்கள் தங்களது விருப்பமான வேலையளிப்பவர்களை மெகா பேனர் மூலம் பார்வையிடுதல்.

திரு. ஆர். அருணகிரி, துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம் அவர்கள் திறன் பயிற்சி ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொண்ட வேலையளிப்பவர்களை பதிவு செய்தல்.



அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, உத்திரமேரூரில் நடைபெற்ற திறன் பயிற்சி ஆள்சேர்ப்பு முகாமில் பணிநியமனம் பெற்ற வேலைநாடுநர்களுக்கு துணை இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம் மற்றும் இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் அவர்கள் பணிநியமன ஆணைகள் வழங்குதல்.

அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, 28.08.2021 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 42 வேலையளிக்கும் நிறுவனங்களும், 14 திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் பங்குபெற்றனர். இதில் 753 நபர்கள் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களில் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

## தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருவண்ணாமலை



25.09.2021 அன்று திருவண்ணாமலை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் திறன் பயிற்சி ஆள்சேர்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் திரு. மு. சந்திரன், சென்னை, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) (பொ), அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் செல்வி. லோ. யோகலட்சுமி அவர்கள், திரு.வி.தியாகராஜன், உதவி பயிற்சி அலுவலர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், திருவண்ணாமலை அவர்கள் மற்றும் திரு. இரா. வெங்கடேசன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் 22 வேலையளிக்கும் நிறுவனங்களும், 3 திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் மற்றும் 1144 வேலைநாடுநர்களும் பங்குபெற்றனர். இதன்மூலம் 382 நபர்கள் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களில் பணிநியமனம் பெற்றனர்.

# நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகப்பட்டினம் இணைந்து நடத்திய தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்



05.09.2021 அன்று நாகப்பட்டினம், சர் ஐசக் நியூட்டன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்ற வேலையளிப்பவர்களிடம் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), திரு மு,சந்திரன் அவர்களும் வேலைநாடுநர்களை தெரிவு செய்வதன் விவரத்தினை கேட்டறிந்தனர்.



தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி மாண்புமிகு திரு ஏ,கே.எஸ் விஜயன், பாராளுமன்ற உறுப்பினர் திரு எம்.செல்வராஜ் அவர்கள் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு ஷாநவாஸ் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திரு மு, சந்திரன் அவர்கள் வேலைவாய்ப்பு முகாமில் தெரிவு செய்த வேலைநாடுநர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கும் நிகழ்வுகள்.

05.09.2021 அன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 70 வேலையளிக்கும் நிறுவனங்களும், 2974 வேலைநாடுநர்களும் பங்குபெற்றனர். இதில் 563 நபர்கள் பணிநியமனம் பெற்றனர்.

# சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

## மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொழில்நெறி வழிகாட்டும் மையம், சேலம்




28.08.2021 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஊன்றுகோல் திட்டத்தின் பயனாளிகளுக்கான சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் நடைபெற்றது. சேலம் மாவட்டத்தைச் சார்ந்த 35 முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் 202 வேலைநாடுநர்கள் இத்தனியார்துறை முகாமில் கலந்து கொண்டனர். சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இம்முகாமில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். முன்னதாக வேலையளிக்கும் நிறுவனங்களுடன் பணிவாய்ப்புகள், பணிக்காலியிட எண்ணிக்கை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டறிந்தார். சேலம் மண்டல இணை இயக்குநர் ( வே) அவர்கள் வேலைவாய்ப்புத் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இம்முகாமில் குரூப் 4 தேர்வில் தேர்ச்சி பெற்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுகாதாரத்துறையில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் சேலம் தன்னார்வ பயிலும் வட்ட மாணவர் திரு. அருண்குமார் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். வேலைவாய்ப்பு அலுவலக இலவச பயிற்சியினால் தனக்கு எவ்வாறு அரசு வேலை எளிதாக கிடைத்தது என எடுத்துரைத்தார்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் பிரிவில் மனு அளித்து தனியார் துறை நிறுவனமான Fin Dynamics – Branch Manager பணியில் ரூ.33,000/– மாத ஊதியத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பணி நியமனம் பெற்ற காயத்ரி அவர்கள் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். வேலைவாய்ப்பு அலுவலர்களது தொடர் முயற்சியால் தனக்கு இவ்வேலை கிடைத்தது என்பதை நன்றி பெருக்குடன் தெரிவித்தார். பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் தங்கள் துறைச் சார்ந்த திட்டங்களை பயனாளிகளுக்கு எடுத்துக் கூறினர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 107 பயனாளிகள் பணி நியமன ஆணைகள் பெற்றனர். தற்சமயம் பணிநியமன ஆணைகள் பெற்ற 107 பயனாளிகளில் 11 நபர்கள் பணியில் சேர்ந்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகப்பேறுக்கு பிறகு வேலையிழந்த பெண்களுக்கான தொழில்நெறி வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சென்னை, சாந்தோம்




01.09.2021 அன்று சென்னை, சாந்தோம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் மகப்பேறுக்கு பிறகு வேலையிழந்த பெண்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் ஆலோசனைகள் வழங்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) திரு.மு.சந்திரன் அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார். இதில் திருமதி.E.மகேஷ்வரி, துணை மேலாளர் கலந்து கொண்டு மகளிருக்கான ஆலோசனைகளை வழங்கினார்கள். தாட்கோ, திரு.அ.அய்யாத்துரை, திறன் பயிற்சி அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வழிகாட்டும் மையத்தின் உதவி வேலைவாய்ப்பு அலுவலர் திரு.G.மாதவதாஸ் அவர்களும் கலந்து கொண்டு மகளிருக்கான ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களும் பங்கேற்றனர்.

# மகப்பேறு முடித்து வேலைவாய்ப்பற்று இருக்கும் மகளிருக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி விழிப்புணர்வு முகாம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம்




திருமதி. த. ரேவதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (இளைஞர் வேலைவாய்ப்பு பணி), மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம் அவர்கள் மகப்பேறு முடித்து வேலைவாய்ப்பற்ற மகளிருக்கு திறன் பயிற்சி குறித்து உரையாற்றுதல்.

# மகப்பேறு முடிந்து மீள பணியில் சேராத பெண்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சி, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருச்சி.





இடம்: நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், உறையூர், திருச்சி.

நாள்: 29.09.2021

இந்நிகழ்ச்சியில் சிறப்பு பேச்சாளர் அவர்கள் மகப்பேறு முடிந்து மீள பணியில் சேராத பெண்களுக்கு சுயதொழில், பொருளாதார விழிப்புணர்வு, தொழில்முனைவோராவது குறித்தும், போட்டித்தேர்வுகளுக்கு தயாராவது அரசு பணி வாய்ப்புகள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இலவச திறன் பயிற்சிகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் செயல்பாடுகள், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெற்றுவரும் இலவச பயிற்சி வகுப்புகள், அரசால் வழங்கப்படும் கல்வி ஊக்க தொகை விவரங்கள், தனியார் துறையில் வேலைவாய்ப்புப் பெற தேவையான தகுதிகள், தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையம் போன்ற வேலைவாய்ப்பை பெறுவது தொடர்பான அனைத்து விவரங்களும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 15 மகப்பேறு பெற்ற பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள்

## அரசு தொழிற்பயிற்சி நிலையம் – மதுரை

அரசு தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), மதுரையில் Cosmetology தொழிற்பிரிவில் பயின்றுவரும் பயிற்சியாளர் C மகாலெட்சுமி "மதுரையில் ராஜதானி Hotel–ல் நடைபெற்ற Professional Welfare Beauty Association மூலமாக Cini Makeup Artist "திரு. ராஜ்கிரிஷ்" அவர்கள் நடத்திய "Bridal Makeup Seminar"–ல் ஆகஸ்டு மாதம் கலந்து கொண்டார். பயிற்சியாளருக்கு பங்கேற்பு சான்றிதழ் (Participation Certificate) வழங்கப்பட்டது.

## போடி அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு மின் பணியாளர் மற்றும் நவீன ஆடை வடிவமைப்பு குறித்து தெரிந்து கொள்ள தொழிற்சாலைகளுக்கு நேரில் அழைத்து சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.







இந்நிலையத்தில் இருந்து மின்சார பணியாளர் மற்றும் நவீன ஆடை வடிவமைப்பு ஆகிய தொழிற் பிரிவுகளை சார்ந்த பயிற்சியாளர்களுக்கு Industrial Visit– செய்ய அண்ணா நூற்பாலை, ஆண்டிபட்டி மற்றும் மேனகா நூற்பாலை, தேனி ஆகிய தொழிற்சாலைகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

# அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), கிண்டியில்
## AZADI KA AMRUT MAHOTSAV நிகழ்ச்சி



செல்வி.N. தேவிப்ரியாசெல்வி.



R. பிரபாவதிசெல்வி.



S. நந்தினி

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்), கிண்டியில் 75–ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு Azadi ka Amrut Mahotsav திட்டத்தில் 28.09.2021 அன்று பயிற்சியாளர்களிடையே பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரை போட்டி நடத்தப்பட்டது. அதில் "ஜாலியன் வாலாபாக் படுகொலை" எனும் தலைப்பில் நவீன ஆடை வடிவமைத்தல் தொழில்நுட்பப் பிரிவை சேர்ந்த செல்வி.N.தேவிப்ரியா, "தொழிற்புரட்சி" எனும் தலைப்பில் அதே தொழிற் பிரிவை சேர்ந்த செல்வி. R. பிரபாவதி மற்றும்" சுதந்திர போராட்ட வீரர்கள்" எனும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் தையல் வேலை தொழில்நுட்பப் பிரிவை சேர்ந்த செல்வி.S.நந்தினி ஆகியோர் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்நிலைய முதல்வர் அவர்களிடமிருந்து பரிசுகள் பெற்றனர்.

## அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டியில் நடைபெற்ற Orientation Programme.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்), கிண்டியில் 2021–ஆம் ஆண்டு புதிதாக சேர்க்கை பெற்ற பயிற்சியாளர்களுக்கு 20.10.2021 அன்று முதல் துவங்கி நடைபெற்ற Orientation நிகழ்ச்சியினை சிறப்பு விருந்தினர் திருமதி.R. ராதா, HR (Admin), Intimate Fashions மற்றும் திரு.F.பிருத்விராஜன் மற்றும் இந்நிலைய முதல்வர் ஆகியோரால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு இனிதே துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது பல்வேறு துறை அலுவலர்களால் பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு, தொழில்முனைவோருக்கான வழிகாட்டு விதிமுறைகள், Covid பெருந்தொற்று பாதுகாப்பு நெறிமுறைகள், தொழிற்சாலைகளில் மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் ஆகிய தலைப்புகளில் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக தற்போது அரசு மற்றும் தனியார்துறைகளில் பணிபுரிந்துவரும் சுயதொழில் புரிந்து கொண்டிருக்கும் முன்னாள் பயிற்சியாளர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும், தொழிற்சாலைகளின் அனுமதி பெற்று பல்வேறு தொழிற் பிரிவுகளை சேர்ந்த பயிற்சியாளர்களை தொழிற்சாலை பணிகளை பார்வையிட அழைத்து செல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சி 27.10.2021 வரை நடைபெற்றது.







## அரசு தொழிற்பயிற்சி நிலையம் கிண்டியில் 20.10.2021 அன்று துவங்கப்பட்ட Orientation programme.









## அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் வடகரையில் நடைபெற்ற 75-வது சுதந்திர தினவிழா - போட்டிகள் நிகழ்ச்சிகள்.

### கட்டுரை போட்டி








வடகரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற ஓவியப்போட்டியில் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களின் பரிசு பெற்ற ஓவியங்கள்




நாகப்பட்டினம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடத்திய ஆய்வின்போது மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் அவர்கள், திருச்சிராப்பள்ளி, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திரு.மு,சந்திரன், அவர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், திருமதி மு.ஹேமலதா, அவர்கள் கலந்துகொண்டு சீருடைப்பணியாளர் காவலர் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு புத்தகங்கள், பாட குறிப்பு தொகுப்பு பரிசாக வழங்கும் காட்சி.







தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை




# தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையம்

**www.tnprivatejobs.tn.gov.in**

## வேலைநாடுநர்கள்

- வேலைக்குப் பதிவு செய்க
- சுயவிவரத்தைப் பதிவேற்றுக
- விருப்பமான வேலையைப் பெறுக

## தனியார்துறை நிறுவனங்கள்

- கணக்கை உருவாக்குக
- வேலைகளைப் பதிவிடுக
- திறமையானவர்களை தேர்வு செய்க

Scan QR code or visit
www.tnprivatejobs.tn.gov.in

National Career Service
MCC MODEL CAREER CENTRE

வெளியீடு : வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்ககம், சென்னை – 32.